# இப்னு சீனாவின் அறிவியல் சிந்தனைகள்: ஒரு விமர்சன நோக்கு

**Riyal, ALM***

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன மேற்கத்தைய அறிவியல்களும், சிந்தனைகளும் ஆரம்பகால இஸ்லாமிய மெய்யியலுக்கும் சிந்தனைகளுக்கும் கடப்பாடுடையதாக உள்ளது. மெய்யியல் மற்றும் விஞ்ஞானம் போன்றவற்றில் முஸ்லிம்களின் பங்களிப்பானது இன்றைய நவீன அறிவியல் சிந்தனைக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. மெய்யியல் மற்றும் அறிவியல சிந்தனையில் பெரும் ஆர்வம் செலுத்தியவராக மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் அலி இப்னும் சீனா (அவிசென்னா) இஸ்லாமிய பொற்காலத்தை சேர்ந்தவராவார். இப்னு சீனா எழுதிய "அல் காணூன் பித்திப்" என்ற மருத்துவக் கலைக் களஞ்சியம் *15* ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் முக்கிய நூலாக சேர்க்கப்பட்டது என்பது இப்னு சீனாவின் அறிவியல் சிந்தனைகளின் முதன்மை அங்கிகாரத்தைப் வெளிப்படுத்தியது எனலாம். இதன்படி இப்னு சீனாவின் அறிவியல் சிந்தனை சார்ந்த அடிப்படையினை விபரிப்பதையும் பகுப்பாய்வு செய்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரை இப்னு சீனாவின் அறிவியல் சிந்தனை என வரையறுக்கப்பட்டுள்ளதனால் ஏனைய இஸ்லாமிய மெய்யியலாளர்களையும் ஏனைய விமர்சனங்களையும் தொடர்புபடுத்திப் பார்க்கும் அணுகுமுறையினை இவ்வாய்வு கையாண்டுள்ளது. அதேவேளை விபரிப்பு முறையிலமைந்த ஆய்வுப் பகுப்பாய்வும் இக்கட்டுரையில் இடம்பெற்றள்ளது. கட்டுரைக்கான தரவுகள் இப்னு சீனாவின் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத் தளங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன.

**பிரதான சொற்கள்:** மருத்துவம், உளவியல், இறை மெய்யியல், அறிவியல், ஆன்மா

To whom correspondence should be addressed: almriyal@seu.ac.lk

*Senior Lecturer, Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.